# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **செல்வி. N. திலகேஸ்வரி, B.Sc., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2024-ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 21-ஆம் நாள், புதன்கிழமை

**I.A. No. 6 of 2024 in O.S. No. 85 of 2006**
**(CNR No. TNSA-13000063-2006)**

பாப்பாத்தி (எ) கலா .. மனுதாரர் / வாதி

எதிராக

1. அருணாசலம் (இறந்தவர்)
2. ராஜேந்திரன்
3. மது (எ) மாதேஸ்வரி
4. ராமலிங்கம்
5. ராஜா .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 14.08.2024-ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. திருநாவுக்கரசு அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மனுதாரர் காலமாகிவிட்ட நிலையில், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. செந்தில்முருகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவுரை

மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை வா.சா.2-ன் மூலமாக மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்துள்ளனர்.

2. **<u>மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>** மனுதாரர்கள் / வாதிகள் தங்களுடைய மனுவில், தற்போது அசல் வழக்கானது தனது தரப்பு மற்ற சாட்சியங்களுக்காக போடப்பட்டு இருப்பதாகவும், 1987-ம் ஆண்டிலிருந்து 2000-ம் ஆண்டு வரையிலும் தாவா சொத்து ஒரு பாலசுப்ரமணியன் என்பவருக்கு தாங்கள் வாடகைக்கு விட்டிருந்ததாகவும், அவரை வா.சா.2-ஆக தனது தரப்பில் விசாரிக்க வேண்டியுள்ளது என்றும், அவர் மூலமாக அவரது குடும்ப அட்டையை குறியீடு செய்ய வேண்டியிருப்பதாகவும், அதன் அசல் ஆவணம் வா.சா.2-ன் வசம் இருப்பதாகவும், அவருடைய ஆவணம் என்பதால் தற்போது தான் அது கிடைக்கப்பெற்றதாகவும், எனவே அந்த ஆவணத்தை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து வா.சா.2-ன் மூலம் ஆவணத்தை குறியீடு செய்ய அனுமதிக்குமாறு வேண்டியுள்ளார்.

3. **<u>2-ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 3 முதல் 5 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>** 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தங்களுடைய எதிருரையில், மனுதாரர் வழக்குரையில் வழக்கு சொத்தில் அமைந்துள்ள வீட்டை மனுதாரரின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கு சொத்தை வாடகைக்கு விட்டதாக வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றும், இந்நிலையில் தற்போது ராமசாமி மகன் பாலசுப்ரமணியன் என்பவரிடம் 187-ம் ஆண்டிலிருந்து 2000 வரை வாடகைக்கு விட்டுவிட்டு வெளியே சென்றுவிட்டதாகவும், உண்மைக்கு புறம்பான விவரத்தை குறிப்பிட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாடகைக்கு விடப்பட்டதற்குண்டான சட்டப்படியான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், ஆத்தூர் நகரத்தில் பல்வேறு பகுதிகள் உள்ள நிலையில் மனுவில் ஒப்படைத்துள்ள குடும்ப அட்டையில் எந்த பகுதிக்குண்டானது என்ற விலாசம் குறிப்பிடவில்லை என்றும், ஆனால் 2005-ல் இருந்து 2009 வரைக்கும் வழங்கப்பட்ட குடும்ப அட்டையின் நகலை இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ளதை சட்டப்படி ஏற்கக்கூடியதல்ல என்றும், மனுதாரர் மனுவில் தாக்கல் செய்துள்ள குடும்ப அட்டையில் உள்ள விலாசமும், வழக்கு சொத்தில் உள்ள விலாசமும் வெவ்வேறானவை என்பதால் மனுதாரர் ஒப்படைத்துள்ள ஆவணத்திற்கும், வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றும், எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கானது தற்போது வாதி தரப்பு வேறு சாட்சியங்களுக்காக போடப்பட்டு நிலுவையில் இருந்து வருவதும் அசல் வழக்கை மனுதாரர் / வாதி நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்பதும், தாவா சொத்தானது வீடு என்பதும் தெரியவருகிறது. மனுதாரர் / வாதி தற்போது தாவா சொத்தில் தான் வாடகைக்கு வைத்திருந்த நபர் வா.சா.2-ஆக தனது தரப்பில் விசாரணை செய்து அவர் மூலமாக அவரது குடும்ப அட்டையை தாக்கல் செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆனால் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தங்களுடைய எதிருரையில் 1987-ம் ஆண்டிலிருந்து 2000-ம் ஆண்டு வரையிலும் தாவா சொத்தை வாடகைக்கு விட்டிருந்ததாக வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றும், தற்போது தாக்கல் செய்யவிருக்கும் குடும்ப அட்டையில் தாவா சொத்தின் விலாசம் குறிப்பிடப்படவில்லை என்றும் கூறி ஆட்சேபனை செய்துள்ளனர். அசல் வழக்கின் வழக்குரையை பரிசீலனை செய்ததில் வாதி தாவா சொத்தை வாடகைக்கு விட்டிருந்ததாக வழக்குரையில் சொல்லப்படவில்லை என்பது தெரியவருகிறது. வாதி தன்னுடைய வழக்குரையில் தான் தான் தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருவதாக கூறியுள்ளார். இதனை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தங்களுடைய பதிலுரையில் மறுத்துள்ளனர். ஆனால் தாவா சொத்தின் மீதான மனுதாரர் / வாதியின் உரிமையை அவர்கள் மறுக்கவில்லை. மேலும் இரு தரப்பினர்களுக்கு இடையேயும் தாவா சொத்தின் மேற்குபுறத்தில் சுற்றுச்சுவர் கட்டுவது தொடர்பாகத் தான் பிரச்சனை உள்ளது என்பது வழக்குரை மற்றும் பதிலுரை சங்கதிகளின் மூலம் தெரியவருகிறது. எனவே வா.சா.2-ன் சாட்சியத்தை ஏற்பதால் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் வழக்கு எவ்விதத்திலும் பாதிப்படையாது என்றும், மனுதாரர் / வாதி தாவா சொத்தை வாடகைக்கு விட்டிருந்தாலும் கூட அதுவும் அவருடைய அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதாகத் தான் கருத இயலும். மேலும் வா.சா.2 சம்மந்தப்பட்ட குடும்ப அட்டை குறித்தான எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் ஆட்சேபனையை ஆவணத்தை குறியீடு செய்யும் சமயத்தில் அவர்கள் தெரிவித்துக்கொள்ளலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இருதரப்பினருக்கும் அவரவர் வழக்கை நிரூபணம் செய்வதற்கு போதுமான ஆவணம் மற்றும் சாட்சியங்களை முன்வைக்க போதிய வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல்

.. 4 ...

செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கு சொத்துக்கு சம்மந்தப்பட்டதா, இல்லையா என்பது குறித்து அவை குறியீடு செய்யப்படும்போது எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை எழுப்ப வாய்பு உள்ளதாலும் அது குறித்து வா.சா.2-ஐ குறுக்கு விசாரணை செய்யவும் வாய்ப்பு உள்ளதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு வழக்கிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே நீதியின் நலன் கருதி இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதிக்க முடிவு செய்கிறது.

6. இறுதியாக, மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2024-ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 21-ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(Sd/- N. திலகேஸ்வரி)**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

| | |
|---|---|
| மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| நீதிமன்ற சாட்சிகள் : | இல்லை |
| நீதிமன்ற சான்றாவணங்கள் : | இல்லை |

**(Sd/- N. திலகேஸ்வரி)**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ., (மு.கூ.பொ.) ஆத்தூர்.**

**கூ.மா.உ.நீ., ஆத்தூர்.**

**இ.ம.வ. எண் 6/2024**

\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-

**அ.வ. எண் 85/2006**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 21.08.2024